புதுமலர்: 07

இதழ்: 03

வைகாசி – ஆனி

# அனல்

இணை ஆசிரியர்கள்

- யோ.நிக்ஷன்
- வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்

ஆவியிலே அனலாயிருங்கள்

கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

– ரோமர் 12:11 –

சீயோன் தேவாலயப் பிரசுரம்

ZION CHURCH PUBLICATION

01.05.2010

## பொருளடக்கம்


* அனலின் குரல்
* கதையும் கற்றதும் - பெறுமதி
* தாமதிக்கிறார்
* வாலிபர் வளாகம்
* வினா விடை - 39
* நற்செய்தி - காற்றினிலே வரும் மரணம்
* பக்தர்களின் பயிலகம்
* குறுக்கெழுத்துப்போட்டி - 37
* வித்திடும் வித்தகர்கள்
* மூவரி முத்துக்கள்
* தேவனுடனான உறவுக்கான அனலின் அழைப்பு


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு,
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

**Zion Prayer Group,**
**347, Navalar Road.**
**Jaffna. Srilanka.**

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

*ஆசிரியர் "அனல்",*
*347 நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம். இலங்கை.*

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


---

***திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11***

# அனலின் குரல்



மறுபடியுமாக வைகாசி-ஆனி மாதங்களுக்குரிய சஞ்சிகையூடாக சந்திக்க கிருபை செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுப்பதோடு, வாசகர்களாகிய உங்களையும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துகின்றோம்.

உங்கள் பாரங்களை எல்லாம் தம்மீது ஏற்றுக் கொண்ட அருமையான ஆண்டவர், உங்கள் சந்தோஷத்தை நிறைவாக்கும்படி இன்றைக்கும் உங்கள் அருகில் வர வல்லமையுள்ளவராக இருக்கிறார். அவர் உங்களை நினைத்திருக்கிறார். நாமும் எல்லா நேரங்களிலும் அவரையே நினைப்போம்.

சங்கீதக்காரன் தாவீது இப்படியாக பாடுகிறார். மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போல தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது! ஆம் பிரியமானவர்களே, எவ்வளவு பெரிதான செயல் இது. அவருடைய தாகம் தேவன் மீது இருந்தது. தாகமுள்ளவர்கள் மேலே தண்ணீரை ஊற்றும் தேவன் உங்கள் தாகம் தீர்க்கும் ஜீவத்தண்ணீராக இருக்கிறார், எனவே சகல துன்பங்களிலும், பாடுகளிலும், இன்பங்களிலும் உங்கள் வாஞ்சை கர்த்தரை நோக்கியதாக இருக்கட்டும். அவரே பாதை காட்டுவார், பெலன் தருவார், ஆசீர்வதிப்பார்.

- ஆசிரியர் -




# பெறுமதி

அந்தப் பிரபல்யமான மனிதரின் உரையைக் கேட்பதற்காக ஒரு கூட்ட ஜனம் அந்த அறையிலே குழுமியிருந்தனர். அந்த பிரபல்யமானவர் மேடையிலே ஏறினார். ஆரவாரங்களும், கூச்சல்களும் அவரை வரவேற்றன. அவர் அனைவரையும் புன்னகையுடன் வரவேற்று தனது சிற்றுரையை ஆரம்பிக்க ஆயத்தமானார். எல்லாரும் ஆர்வத்துடன் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அவர் ஒரு பெறுமதி மிக்க நாணயத்தாளை தனது கைகளிலே எடுத்தார். அதை மேலே உயர்த்தி, **உங்களில் யார் இந்த பெறுமதிமிக்க நாணயத்தாளைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறீர்கள்?** என்று கேட்டார். அங்கேயிருந்த அநேக ருடைய கரங்கள் மேலே உயர்ந்தன. **நான் இந்த நாணயத்தாளை உங்களில் ஒருவருக்குக் கொடுக்கத்தான் போகின்றேன். ஆனால் அதற்கு முன்பாக நான் ஒரு காரியம் செய்ய வேண்டும்** என்று கூறியவர் தனது கையிலே இருந்த அந்த நாணயத்தாளை நிலத்திலே போட்டு தனது கால்களினாலே மிதித்துக் கசக்கினார். பின்னர் அவர் அதை மீண்டும் தனது கைகளிலே எடுத்தார். அந்த நாணயத்தாள் அழுக்கடைந்து கசங்கிப் போய் இருந்தது. **இப்பொழுது உங்களில் யார் இந்த பெறுமதிமிக்க நாணயத்தாளைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறீர்கள்?** என்று மீண்டும் கேட்டார். அப்பொழுதும் அநேகருடைய கரங்கள் மேலே உயர்ந்தன. அந்த அழுக்கடைந்த நாணயத்தாளைப் பெற்றுக் கொள்ள அவர்கள் தயங்கவில்லை.

**அப்பொழுது அந்த மனிதர் எனதருமை நண்பர்களே! பார்த்தீர்களா? இந்த நாணயத் தாள் அழுக்கடைந்து கசங்கிப் போய் இருந்தாலும் அதைப் பெற்றுக்கொள்ள நீங்கள் தயங்கவில்லை. ஏனெனில் அதன் பெறுமதி குறைந்து போகவில்லை. அதன் மூலமாக நாம் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகளும் குறைந்து போகவில்லை** என்றார். பின்பும் அவர், **இதே போன்று தான் எமது வாழ்க்கையும் உள்ளது. அநேகத் தடவைகள் நாம் எதிர்நோக்கும் சோதனைகளாலும், பிரச்சினைகளாலும் நிலத்திலே தள்ளப்படுகின்றோம், மிதிக்கப்படுகின்றோம். பெலனிழந்து போகின்றோம். ஆனால் காரியம் அதுவல்ல. நமது பெறுமதி குறைந்து போவதேயில்லை. நீங்கள் கலங்கிப் போகக்கூடாது** என்றார்.

ஆம்!! இது எவ்வளவு உண்மை. தேவன் எம்மை விசேடமானவர்களாக உருவாக்கியுள்ளார். எமக்கு வரும் சோதனைகளும், பிரச்சினைகளும் எம்மை இன்னும் இன்னுமாக புடமிட்டு பொன்னாக விளங்கப்பண்ணும். தேவன் எமது பக்கபலமாக இருக்கும் போது நமது பெறுமதி குறைந்து போவதேயில்லை. என்ன வேதனையோ, என்ன துக்கமோ எது எம்மை வருத்தினாலும் தேவன் எம்மோடு இருப்பார், எம்மைப் பாதுகாப்பார். உங்களது வாழ்க்கை அந்த கசங்கிய நாணயத்தாளைப் போன்று இருக்கலாம். ஆனால் மனம் தளர்ந்து போகாதீர்கள்.

***நீங்கள் பெறுமதிமிக்கவர்கள் என்பதனை ஒரு போதும் மறந்து போக வேண்டாம்.***

கெ.இன்பருபன்.

# தாமதிக்கிறார்

எந்தக் காரியத்தை அடைய வேண்டும் என நினைக்கிறோமோ உடனடியாகவே அது நடந்தேற வேண்டும் என மனித கூட்டம் விரும்புகின்றது. அதற்காகவே செயலாற்றுகின்றது.

பரீட்சை வினாத்தாள்களை ஆசிரியர் திருத்த தாமத மானால் மாணவர்கள் சினமடைய ஆரம்பித்துவிடுவார்கள். காரணம் யாருக்கு அதிக புள்ளி: எனக்கு எத்தனை புள்ளி என்று எல்லாம் பார்ப்பதற்காக. பல வேளைகளில் ஆசிரியர் வகுப்பிற்கு வருவது தாமதித்துவிட்டால் மாணவர்களுக்கு அதிக சந்தோஷம். விளையாட்டிலும், வேறு அலுவல்களிலும் நேரத்தைப் போக்கி விடுவார்கள்.

வாழ்க்கையிலே சில தாமதங்கள் சந்தோஷமாகவும், சில தாமதங்கள் நமது இருதயத்திற்கு கசப்பாகவும், வேதனையாகவும் இருக்கின்றது. குறித்த நேரத்திற்கு மகனோ, மகளோ வீட்டிற்கு வருவேன் எனக்கூறி வரவில்லையானால் பெற்றோரின் இருதயம் கலக்கமுற்று பிள்ளையைத் தேட ஆரம்பித்துவிடுவார்கள்: அது வழமை.

ஆனால் உலக மக்கள் அனைவருக்கும் ஒரு நல்ல செய்தி யாதெனில் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.

**தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தைக் குறித்து தாமதமாய் இராமல்: ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராய் இருக்கிறார்.**

ஆண்டவர் இயேசுவின் விருப்பம் ஒருவரும் அழிந்து கெட்டுப்போய்விடக் கூடாது என்பதாகும். அதற்காக அவரே நமக்காக வந்து (முதலாம் முறை) நம்முடைய பாவங்களைப் போக்குவதற்காக பாடுபட்டு இரத்தம் சிந்தி சிலுவையிலே மரித்தார். அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து இன்றைக்கும் ஜீவிக்கின்றார்.

எல்லாரும் மனந்திரும்ப வேண்டும். இதை வாசிக்கும் என் பிரியமான நண்பனே நீ எவ்வாறு வாழ்கின்றாய்? வியாதியிலும், பாவத்திலும், சாபத்தின் பிடியிலும் இருக்கின்றாயோ? இன்றே அவரிடம் வா... உன்னுடைய எல்லாப் பாவ பழக்க வழக்கங்களையும் இயேசு கிறிஸ்துவுக்கு அறிக்கை செய்து விட்டுவிடு. அவரை உன் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள். அப்பொழுது நீ அவரின் வருகையில் அவரோடு கூடச் செல்லலாம்.

*உன்னுடைய நன்மைக்காக இயேசு கிறிஸ்துவின் வருகை தாமதமாயிருக்கிறது. நீ கெட்டுப்போகக்கூடாது.*

**இன்றே இயேசுவை நோக்கிப்பார்ப்பாயா?**

– ரேமா. –

## குறுக்கெழுத்துப் போட்டி - 36
## சரியான பதில் எழுதியவர்கள்

01. உ.கிரிஜா – காரைநகர்
02. சி.கல்யாணி – காரைநகர்
03. து.சிவாஜினி – காரைநகர்
04. தே.காந்தரூபன் – காரைநகர்
05. ச.சிவரூபன் – காரைநகர்
06. அ.கம்சிகா – காரைநகர்
07. அ.துர்க்கா – காரைநகர்
08. அ.எஸ்தர் – காரைநகர்
09. அ.கிருசாந்தன் –காரைநகர்
10. அ.பத்மாவதி – காரைநகர்
11. ம.தேவசாந்தன் – பாண்டவெட்டை
12. ம.சிவகௌரி –பாண்டவெட்டை
13. ம.டயானி – பாண்டவெட்டை
14. ம.மதுசன்டேவிட் – பாண்டவெட்டை
15. பா.கோமதி – காரைநகர்
16. பா.மோகனதாஸ் – காரைநகர்
17. பா.டிலானி – காரைநகர்
18. ப.தர்சினி – காரைநகர்
19. பா.வதனி – காரைநகர்
20. தி.ஜெகா – மயிலங்காடு
21. ம.நந்தசுஜா – பெண்கள் சிறைச்சாலை. யாழ்ப்பாணம்
22. ந.தர்சினி – யாழ்ப்பாணம்
23. ப.ராஜ்குமார் – காரைநகர்
24. எஸ்.மாக்கிர் –மீசாலை
25. றெ. கொன்சி – திருநெல்வேலி
26. எஸ். மனோகரி – நீர்வேலி






# இயேசுவைக் காண விரும்புகிறோம்
# We would like to see Jesus

**இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!**

குடும்பத்தால் நேசிக்கப்பட்டவன், அயலகத்தாரால் அன்பு பாராட்டப்பட்டவன் திடீர் என வியாதிப்பட்டான்: இரண்டு சகோதரிகளும் ஓ.. என்று வீரிட்டு அழுகின்றார்கள். இனி எங்கள் எதிர்காலத்தை எப்படி ஓட்டுவோம் எங்கள் அன்புத் தம்பியும் வியாதிப்பட்டு விட்டானே என்று ஏக்கம் கொண்டவர்களாய், கலக்கமுற்று இருந்தனர் உடனடியாக செய்தியை இயேசுவுக்கு அறிவிக்கும்படியாக ஆட்களை அனுப்புகின்றனர்.

செய்தியை கேட்ட இயேசு பின்னும் தாமதம் பண்ணினார். நடந்ததென்ன லாசரு மரித்து விட்டான் உன் வாழ்க்கையிலே பிரச்சினைகள் ஏற்படும் போது முறுமுறுப் படையாதே. காரியங்கள் சீக்கிரமாய் நடக்கவில்லையே, எங்கள் விருப்பப்படி இயேசு இதனைச் செய்யவில்லையே என்று அவர் மீது கோபம் கொள்ளாதே.

இது தேவனுடைய மகிமை விளங்கும் நேரமாயிருக்கிறது. இயேசு மரண வீட்டிற்கு வந்த போது மரித்த வாலிபன் புதைக்கப்பட்டு நான்கு நாட்கள் ஆயிற்று. எந்தவிதமான நம்பிக் கையும் இல்லை; நன்மையை இனி காணமாட்டோம் என்று உறவுகள் துடிதுடித்தன.

இயேசுவைக் கண்டதும் நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரித்திருக்க மாட்டான் என்று இரண்டு சகோதரிகளும் சொன்னார்கள்.

மரணத்தின் மீதும் அதிகாரம் கொண்டவர் நீர் மட்டுமே தான் என்று அறிக்கையிட்டார்கள். இயேசு கண்ணீர் விட்டார்.

ஒரு வாலிப்னின் மரணம் அவரை எவ்வளவாக பாரப் படுத்தியிருந்தது. வாழ வேண்டியவன், தான் வைத்த நோக்கத்தை பூமியிலே நிறைவேற்ற வேண்டியவன், அனேகருக்கு ஆதரவாய் இருக்க வேண்டியவன் பாதிவயதிலே ஜீவித்துப் போனான் என்று கலங்கிய இயேசு அவனை மறுபடியும் வாழவைக்கும் படியாக கடந்து கல்லறையினிடத்திற்குப் போகின்றார்.

**கல்லை எடுத்துப் போடுங்கள்: கல்லை எடுத்துப் போட்டார்கள்.**

ஒருவேளை நீ மரித்த நிலையில் இருந்தால் இயேசு உன்னை உயிர்ப்பிக்க வந்திருக்கிறார். அல்லது நீ உயிரோடு வசனத்திற் குள்ளாக ஜீவிப்பாயானால் மரித்த வாலிபர்கள் உயிரடையும் படியாக கல்லைப் புரட்டிப்போட உதவும்படி அவர் உன்னைக் கேட்கின்றார்.

பல ஆயிரங்கள் இயேசு இல்லாமல் இந்த இலங்கையிலே மரித்த நிலையிலே இருக்கிறார்கள். நீ உன்னால் இயன்ற பணியை செய்து அவர்களின் குருடாக்கப்பட்ட கண்களையும் கட்டுண்ட சிந்தை, கை, கால், உடல் முழுவதையும் மீட்புறச் செய்ய சுவிசேஷப் பணிக்கு உன்னை ஒப்படைக்கமாட்டாயா?.

**லாசருவே வெளியே வா என்று சத்தமாய் கூப்பிட்டார்.**

எவ்வளவு இனிய அன்பு கொண்டார். இயேசு ஒவ்வொரு வாலிபனின் பெயரையும் சொல்லி எந்த எந்த நிலையிலே மரித்திருந்தாலும் வெளியே வரும்படி அழைக்கும் நல்ல தகப்பன் அவர். **மரித்தவன் வெளியே வந்தான்.** கட்டவிழ்த்து விடுங்கள் என்றார்.

ஒரு வேளை உன்னால் கல்லை புரட்டித்தள்ள முடியாத படிக்கு பெலன் இல்லாமல் இருக்கலாம். என்னால் இது முடியாது என நீ ஒதுங்காதே: கட்டுக்களையாவது அவிழ்ப்பதற்கு உன் கரத்தை அவர் பணியிலே இணைத்துவிடு. அவரின் திட்டத்தில் நீயும் உன்னால் முடிந்த ஏதாவது ஒன்றையாவது ஆத்துமாக்களின் மீட்புக்காக, நல் வாழ்வுக்காக செய்ய வேண்டும்.

**கட்டுக்களை அவிழ்க்கவாவது கரம் கொடுப்பாயா?**

மரித்த வாலிபனை இயேசுக்கிறிஸ்து தன்னுடைய வார்த்தையினாலே உயிர்ப்பித்தார். இந்தச் செய்தி சுற்றிலும்

எல்லாராலும் அறியப்பட்டது. உடனடியாக அனேகர் அவர் மேல் விசுவாசம் வைத்தார்கள்.

எனக்கு பிரியமான சகோதர சகோதரிகளே உங்கள் வாழ்வில் உண்டான மாற்றத்தின் மூலமாக மற்றவர்கள் கிறிஸ்து இயேசுவில் விசுவாசம் வைக்கிறார்களா? லாசருவை இயேசு உயிர்ப்பித்ததின் நிமித்தம் இயேசுவைக் கொலை செய்யும்படிக்கு ஆலோசனை பண்ணினார்கள். (யோவான் 11:53)

வாலிபர்கள் உயிர்மீட்சி அடைவது ஒரு போதும் சத்துருவானவன் விரும்பாத செயலாகும். அவன் வாலிபரின் பெலனை நன்கு அறிந்திருக்கின்றான். வேதம் சொல்லுகின்றது **வாலிபர்கள் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.** *வாலிபரே நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்தீர்களாலும், வாலிபரே நீங்கள் பலவான்களாய் இருக்கிறதினாலும், வேதவசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும்.*

இப்படியான மேன்மையான நிலையை தேவபார்வையிலே வாலிபர்கள் கொண்டிருப்பதினால் சத்துருவானவன் ஒருவன் உயிர்பெற்றாலும் அதற்கு காரணமாயிருந்த கிறிஸ்துவை கொலை செய்ய ஆலோசனை பண்ணுகின்றான். அன்று மட்டுமல்ல இன்றும் கூட.

**அப்பொழுது யூதரில் திரளான ஜனங்கள் அவர் அங்கே இருக்கிறதை அறிந்து இயேசுவின் நிமித்தமாக மாத்திரம் அல்ல அவர் மரித்தோரிலிருந்து எழுப்பின லாசருவைக் காணும்படியாகவும் வந்தார்கள். (யோவான் 12:9)**

**லாசருவின் நிமித்தமாக யூதர்களில் அநேகம்பேர் இயேசுவினிடத்தில் விசுவாசம் வைத்தபடியால் லாசருவைக் கொலை செய்ய ஆலோசனை பண்ணினார்கள். (யோவான் 12:10-11)**

உயிர்ப்பிக்கப்பட்ட வாலிபன் நிமித்தமாக அனேகர் இயேசுவில் விசுவாசம் வைத்தார்கள். உன் வாழ்க்கையும் அவரால் உயிர்ப்பிக்கப்பட்டது உண்மையானால் அதன் விளைவு மற்றவர்கள் இயேசுவின் மீதும் அவர் வார்த்தையின் மீதும் விசுவாசம் கொள்வதே ஆகும்.

இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று பண்டிக்கைக்கு வந்த ஜனங்கள் கேள்விப்பட்டார்கள். கூடவே லாசருவையும் உயிரோடு திரும்பவும் இந்த இயேசு எழுப்பினார் என்று அவரோடு இருந்தவர்கள் சாட்சி கொடுத்தார்கள். உடனே எல்லாரும் அவரை வரவேற்றுகும்படி எதிர்கொண்டு போனார்கள்.

இயேசுவுக்கு விரோதமானவர்கள் தாங்கள் செய்கிற காரியங்கள் வீண் என்று அறிந்து கொண்டார்கள். (யோவான் 12:19)

**உலகமே இயேசுவிற்கு பின்னால் போயிற்றே என்றார்கள்.**

ஒரு வாலிபனை உயிர்ப்பித்த செயலானது இயேசு கிறஸ்துவை அனேகர் விசுவாசிக்கவும், அவரை அனேகர் பின்பற்றவும் செய்துவிட்டது. **இன்று இது உன்னில் உண்மையா?.**

இந்த இயேசுவை, மரித்த வாலிபனை உயிர்ப்பித்த இயேசுவை, வார்த்தையில் உண்மையுள்ள இயேசுவை, யார் கைவிட்டாலும் கைவிடாத இயேசுவை, யூதர் அல்லாதவர்கள் கூட பார்க்க விரும்பினார்கள். அவரைப் பார்த்தாலே போதும் எப்படியாவது ஒருமுறை தன்னும் அவரைக் காணவேண்டும் என்று பிலிப்புவிடத்தில் வேண்டுகின்றார்கள்.

இயேசுவைக் காணவிரும்புகின்றோம். வாலிபர்களை இயேசு கிறிஸ்து இன்றும் கூட தன்னுடைய வார்த்தையின் வல்லமையால் உயிர்ப்பிக்கின்றார். காரணம் அதன் மூலம் அநேகர் தன்னைக் கண்டுகொள்ளுவதற்காகவே.

எனக்கு அன்பான சகோதரனே / சகோதரியே நீ எந்த நிலையில் இருக்கின்றாய். லாசரு போல மரித்த நிலையில் இருக்கிறாயா? அல்லது அவனுடைய சகோதரி போல் அவிசுவாச வார்த்தைகளை பேசுகின்றாயோ? அல்லது கல்லையாவது எடுத்துப் போட ஒரு கரத்தை கொடுத்து உதவுகிறாயா? முடியாவிட்டால் கட்டுக்களையாவது அவிழ்த்துவிட ஒப்புக் கொடுப்பாயா? இறுதியாக இயேசுவைக் காண விரும்புகின்றாயா?

**இயேசுவைக் காண விரும்புகின்றோம்! இயேசுவைக் காண விரும்புகின்றோம்!**

**இயேசுவைக் காண விரும்புகின்றோம்!**



**கிறிஸ்துவின் பணியில்:**
**வேதநாயகம் ஞானசீலன்.**

# வினா விடை – 39

01. உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன் என்றது யார்?
02. யாருடைய ஆலோசனை கவிழ்க்கப்படும்?
03. என் ஆத்துமாவே அவர்களுடைய இரகசிய ஆலோசனைக்கு உடன்படாதே என்றது யார்?
04. அதுதன் இஷ்டப்படி செய்து வல்லமை கொண்டது எது?
05. மேன்மையில் பிரதானமும் வல்லமையில் விசேஷமுமானவன் யார்?
06. உன் கூட்டைக் கன்மலையில் கட்டினாய் அது யார்?
07. இரண்டு புதுக்கயிறுகளால் கட்டி கன்மலையில் இருந்து கொண்டு போகப்பட்டது யார்?
08. அவைகள் ஒரே மேய்ப்பனாலே அளிக்கப்பட்டது. எவைகள்?
09. உம்முடைய ஜனங்களை உமது புயத்தினாலே மீட்டுக் கொண்டீர் என்றது யார்?
10. கர்த்தரின் ஆலயத்துக்குள் பிரவேசியாதிருந்தவன் யார்?

## வினாவிடை - 38 சரியான விடை எழுதியவர்கள்

01. ப.ராஜ்குமார் - காரைநகர்
02. உ.கிரிஜா - காரைநகர்
03. சி.கல்யாணி - காரைநகர்
04. த.சிவாஜினி - காரைநகர்
05. தே.காந்தரூபன் - காரைநகர்
06. ச.சிவரூபன் - காரைநகர்
07. அ.கம்சிகா - காரைநகர்
08. அ.துர்க்கா - காரைநகர்
09. அ.எஸ்தர் - காரைநகர்
10. அ.கிருசாந்தன் - காரைநகர்
11. அ.பத்மாவதி - காரைநகர்
12. ம.தேவசாந்தன் - பாண்டவெட்டை
13. ம.சிவகௌரி - பாண்டவெட்டை
14. நா.சிவபாக்கியம் - காரைநகர்
15. நா.கிறிஸ்தீனா - காரைநகர்
16. சு.சுதர்சினி - காரைநகர்
17. தி.உலகேஸ்வரி - பாண்டவெட்டை
18. ம.டயானி - பாண்டவெட்டை
19. சூரியெஸ் ஜான்சினி - நாவற்குழி
20. லோறன்ஸ் நெகேமியா - நாவற்குழி
21. பா.வதனி - காரைநகர்
22. பா.மோகனதாஸ் - காரைநகர்
23. பா.டிலானி - காரைநகர்
24. பா.தர்சினி - காரைநகர்
25. பா.கோமதி - காரைநகர்
26. ம.மதுசன்டேவிட் - பாண்டவெட்டை
27. எஸ். மதுஷன் டேவிட் - பாண்டவெட்டை



# அன்பின் நற்செய்தி

## காற்றினிலே வரும் மரணம்




காற்றினிலே கீதம் வருவதாக கொஞ்சக் காலம் முன்பு பாடி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இப்பொழுது காற்றில் மரணம் வருவதாக சொல்லிப் பயந்து கொண்டிருக்கிறார்கள்.

காற்று மனிதனுக்கு அவசியமானது. சுவாசிக்கவும், வியர்க்காமலிருக்கவும், இசையையும், பேச்சையும் கேட்கவும் காற்று அவசியம். ஆனால்....

அப்படிப்பட்ட காற்றிலேயே மரணம் வரும் என்றால்.....?

வேண்டாம் என்று தள்ளவும் முடியாது. வாவென்று வரவேற்கவும் முடியாது.

தென்றலையும், வாடையையும் வாவென்று பாடிய தமிழ் கதாநாயகர்களும், கவிஞர்களும் கூட பயந்து கொண்டு இப்போதெல்லாம் வாயைத் திறப்பதில்லை.

**என்ன நடந்தது?**

நாடுகள் ஒன்றுடன் ஒன்று சண்டையிடுவதானால் அக்காலத்தில் எல்லாம் கத்திகளைக் கொண்டு வெட்டுவார்கள். துப்பாக்கிகளை வைத்து சுட்டுக் கொல்வார்கள். அட மிஞ்சிப் போனால் குண்டுகளை வீசிக்கொல்வார்கள்.

ஆனால் இப்போது நிலமையே வேறு, நாடுகளுக்கு விரோதமாக விஷக்கிருமிகளை காற்றில் ஏவிவிடுகிறார்கள்.

இந்தப் போர் முறை மூச்சுவிடும் யாவரையும் பாதிக்கின்றது.

யுத்தங்களுக்கு சம்பந்தமே இல்லாத கால்நடைகளையும் பழிவாங்குகின்றது.

சில காலம் முன்பு 1990 என்று நினைக்கின்றேன். நாம் வெளியிட்ட பத்திரிகையில் கண்ணுக்கு தெரியாத எதிரிகள் என்ற தலைப்பில், கிருமிகளைக் கொண்டு நடைபெறப் போகும் போர்களைப் பற்றி எழுதியிருந்தேன்.

அந்தக் கட்டுரை, இனி எதிர்காலத்தில் யுத்தம் என்று வருமானால் அதில் விஷக்கிருமிகளே அதிகமாக பயன்படுத்தப்படும் என்கிறது.

இன்று அது நடந்து கொண்டிருக்கிறது. நான் அதை தீர்க்கதரிசனமாக எழுதவில்லை. அனுமானமாகத் தான் எழுதியிருந்தேன்.

இன்று ஆப்கான் மற்றும் அமெரிக்க தேசங்களுக்கிடையே நடைபெற்றுவரும் யுத்தம் காரணமாக ஏராளமான விஷக்கிருமிகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

ஆந்திராக்ஸ் என்ற வார்த்தை கொஞ்சக் காலத்திற்கு முன்பு எல்லா செய்தித்தாள்களையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. சின்னாம்பாளையம் டீக்கடையில் கூட மக்கள் ஆந்திராக்ஸ் பற்றி பேசிக்கொண்டார்கள். பத்திரிகைகளில் நாலு ஜோக்குகள் வந்தால் இரண்டில் ஆந்திராக்ஸ் இருந்தது. அவ்வளவு பிரபலமாகக் காணப்பட்டது. யாராவது பிள்ளைகளுக்கு ஆந்திராக்ஸ் என்று பெயர் வைத்திருந்தார்களா என்று தெரியவில்லை.

ஆந்திராக்ஸ் என்னும் வகை கிருமி, தபால்கள் மூலம் கூட எதிரி நாடுகளுக்குள் அனுப்பப்படுகின்றன.

இதினிமித்தம் இன்று பல்வேறு தேசங்களிலும் பீதி பரவி உள்ளது.

பல நாடுகளில் தபால் துறையினர் நிலவுக்கு போகிறவர்கள் மாதிரி உடையணிந்து கொண்டு அலுவலகம் செல்கிறார்கள்.

தபால்களைப் பிரிக்கும் இடங்களில் ஆபரேஷன் தியேட்டர் டாக்டர்கள் மாதிரி நடந்து கொள்கிறார்கள்.

வெகு ஜனங்களில் பலருக்கு மூக்கில் நீளம் கூடியிருக்கிறது. உபயம்; சுவாசக் கவசம்.

பல இடங்களில் வரும் தபால்களில் மெல்லிய பவுடர் போன்ற துகள்களில் இவ் வகை கிருமிகள் இலவச இணைப்பாக அனுப்பப்படுவதாக செய்திகளில் சொல்கிறார்கள்.

பல்வேறு முக்கிய நிறுவனங்களுக்கும், தலைவர்களுக்கும் இவ் வகை பவுடர் தபால்கள் வருவது தற்சயம் பெருகிவருகிறது.

இவற்றுள் வதந்தி தபால்களைக் கழித்துவிட்டுப் பார்த்தாலும், நிறைய கிருமித்தபால்கள் வந்ததையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

இன்று நாடுகள் ஒன்றையொன்று பழிதீர்த்துக் கொள்ள கண்ணுக்குத் தெரியாத இந்த கிருமிகளைப் பயன்படுத்துவது பயங்கரம்.

ஆளாளுக்கு இப்படிச் செய்வார்களேயானால் ஒரு கட்டத்தில் காற்று முழுவதுமே பாதிக்கப்பட்டு சுவாசத்திற்கும் தனியாக நாம் சிலிண்டர் வாங்க வேண்டியிருக்கும்.

பண்டிகைக்கு விண்வெளி உடை தான் தைக்க வேண்டியிருக்கும்.

**யுத்தங்களில் கிருமிகளைப் பயன்படுத்துவதன் காரணம் என்ன?**

கிருமிகளை யுத்தத்தில் பயன்படுத்துவதில் நாடுகளுக்கு பல அனுகூலங்கள் இருக்கின்றன. முதலாவது இந்தக் கிருமி யுத்தத்திற்கு

செலவு குறைவு. ஒரு பிளாட்பார லேகியம் தயாரிக்கும் விஞ்ஞானி கூட தன் அடுப்படியில் இந்தக் கிருமிகளை தயார் செய்து விட முடியும்.

போர் என்றால் நிறைய வீரர்களை தயார் செய்ய வேண்டும். அவர்களுக்கு நிறையச் செலவழிக்க வேண்டும். பயிற்சியளிக்க வேண்டும். அந்த மாதிரி கச்சடாக்களெல்லாம் இதில் இல்லை.

நாடுகள் போரில் குதிக்க வேண்டுமானால் ஐ.நா.சபைக்கு தகுந்த ஆதாரங்களுடன் போருக்கான காரணத்தை விளக்க வேண்டும். கிருமிப்போர் என்றால் அது துவங்குவதே தெரியாது. ஐ.நா.வுக்கும் சொல்ல வேண்டாம்.

**நிறைய வசதிகள் உண்டு.**

எனவே, இன்று நிறைய நாடுகள் குண்டுகள் தயாரிப்பதை இரண்டாம் கட்டமாக்கிவிட்டு கிருமிகளை தயாரிப்பதில் அதிக நாட்டம் காட்டுகின்றன.

கிருமிகளை யுத்தத்தில் பயன்படுத்தக் கூடாது என்ற சட்டம் உலக அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் காரியத்தை வெளியே தெரியாமல் கள்ளச்சாராயம் காய்ச்சுகிற பாணியில் கமுக்கமாய் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**இந்த முறை யுத்தம் வெகு சுலபமானது.**

பயங்கரத் தொற்று நோய்களான மூளைக் காய்ச்சல், பிளேக், கொடிய தோல் நோய்கள், சிலவகை விஷக்காய்ச்சல்கள், காலரா போன்றவையை உண்டாக்கும் நுண்ணுயிர்களை சோதனைச் சாலைகளில் உருவாக்கி

பின்னர் அவைகளை எதிரிநாடுகளுக்குள் தந்திரமாக கடத்த வேண்டியதுதான்.

எதிரி நாடுகளுக்குள் கிருமிகளைப் பரப்புவதிலும் சில புதிய முறைகளைக் கடைப்பிடிக்கிறார்கள். ஒன்று, கிருமிகளை சோதனைச் சாலைகளில் வளர்த்து அவற்றை எலி, முயல் போன்ற பிராணிகளின் உடல்களில் ஏற்றி எதிரி நாடுகளுக்குள் அனுப்பி விடுகிறார்கள்.

பிறகென்ன? சற்று ஓய்வாக அமர்ந்து கொண்டு எதிரி நாட்டின் சாவு எண்ணிக்கை பற்றிக் கணக்கிட வேண்டியது. கத்தியின்றி இரத்தமின்றி கச்சிதமாக காரியம் முடிந்து விடும்.

சென்ற 1993ஆம் ஆண்டு இந்தியாவிற்குள் சட்ட விரோதமாக நுழைந்து, குஜராத்துக்குள் நுழைய முயன்ற சில பாகிஸ்தானிய உளவாளிகள் பிடிபட்டனர். அவர்களது சூட்கேஸ்களை ஆராய்ந்தால் உள்ளே சின்னது சின்னதாய் எலிப்பொறிகள். அவற்றுக்குள் தாங்களும் தீவிரவாதிகளாய் மாற்றப்பட்டதை அறியாத எலிகள் மலங்க மலங்க விழித்துக் கொண்டிருந்தன.

விசாரித்தால் சிலர் நாய் வளர்க்கிறது போல நாங்கள் இந்த எலிகளை வளர்க்கிறோம். எங்களுடன் தான் சாப்பிடும், எங்களுடன் தான் தூங்கும் என்று கதையளந்தனர்.

வழக்கம் போல இது விஷயத்திலும் அலட்சியம் பாராட்டிய இந்திய அதிகாரிகள், தொடர்ந்து நாட்டில் பிளேக் நோய் பரவி ஜனங்கள் கொத்துக் கொத்தாய் சாகிறதை கண்டபோது தான் பிளாஷ்பேக்கில் நடந்ததை நினைவுக்கு கொண்டு வந்து கையைப் பிசைந்தார்கள்.

உளவாளிகள், கிருமியேற்றம் செய்யப்பட்ட எலிகளைக் கொண்டு வந்து தான் நாட்டில் பிளேக்கை பரப்பியிருக்க வேண்டும் என்று கருதினார்கள்.

உளவாளிகளும், ஒற்றர்களும் கையளவு துப்பாக்கியுடனும், டிரான்ஸ்மிட்டர்களுடனும் வந்த காலம் போய் இன்று எலிகளுடனும், கொசுக்களுடனும் வரத்தொடங்கியுள்ளது என்பது கிருமி யுத்தத்தின் பயங்கர துவக்கத்தைக் காட்டுகின்றது.

இரண்டாவது முறையை வியூபாயின்ட் என்ற பத்திரிகை இப்படிக் காட்டுக்கின்றது. எலிகள், கொசுக்கள் மூலம் தான் கிருமிகளை நாட்டிற்குள் கொண்டு வரவேண்டும் என்பதில்லை. ஒரு நாலங்குல டெஸ்ட்டியூபிலேயே கூடக்கொண்டு வந்து ஊருக்குள் உடைத்துவிட்டால் போதும், வியாதிகள் பரவ ஆரம்பித்துவிடும். இப்போது வைரஸ் கிருமிகள் அடங்கிய சிறிய குண்டுகள் கூட வந்துவிட்டன .

விளாங்காயளவேயான இக் குண்டுகள் சப்தமில்லாமல் வெடிக்கக்கூடியவை. நகரத்திலோ, கிராமத்திலோ நாட்டின் எந்த ஒரு மூலையிலோ சப்தமில்லாமல் வெடித்துப் போய்விட்டால் நிச்சயமாக மூன்று நாட்களுக்குள்ளெல்லாம் இந்த விளாங்காய்களின் பயங்கரம் தெரிய ஆரம்பித்துவிடும்.

மூன்றாவது முறை. தற்கொலைப் படைத் தீவிரவாதிகள் தங்கள் உடலிலேயே விஷக்கிருமிகளை ஏற்றிக்கொண்டு மிகச்சுலபமாக நாட்டிற்குள் வந்துவிடுவது.

கஸ்டம்ஸிலும் தங்கம் மற்றும் கஞ்சா தேடுகிற அளவிற்கு யாரும் கிருமிகளைத் தேடுவதில்லை.

காரணம் சிலவகைக் கிருமிகள் உடலில் ஏற்றப்பட்டு பல மணி நேரங்களுக்குப் பிறகே தான் விருத்தியடைந்து உடலில் பரவ ஆரம்பிக்கும். அதன் பின்புதான் சோதனைச் சாலையில் தன்னைக் காண்பிக்கும்.

எனவே, பயணத்திற்கு இரண்டொரு மணி நேரத்திற்கு முன்பு சிரிஞ் மூலம் உடலில் கிருமிகளை ஏற்றிக்கொண்டு வந்தால் நிச்சயம் மாட்டிக்கொள்ள மாட்டார்கள்.

சோதனை முறைகளை இன்னும் தீவிரப்படுத்தி உடனடியாக கண்டுபிடிக்கிற மாதிரி முறைகளைக் கொண்டு வந்து தீவிரவாதிகளைக் கண்டுகொள்ளும் வசதி செய்தால் கூட நம்போன்ற பிரதேசங்களில் ஒரு பிராந்தி பாட்டிலையோ, சென்ட் பாட்டிலையோ தந்து சுலபமாக தப்பிவிடலாம்.

இவை தவிர இப்போது மிகச்சுலபமாக தபால் மூலம் கிருமிகளை அனுப்புகிறார்கள்.

தபால் முறையில் தையல், தபால் முறையில் பல்கலைக்கழகப் படிப்பு என்றெல்லாம் துவங்கி கடைசியில் தபால் மூலம் யுத்தங்களும் நடக்கின்றன. தபால்துறையின் வளர்ச்சி பிரமிக்க வைக்கிறது.

இரகசியமாகக் கொண்டுவரப்படும் கிருமிகளை நீர் நிலைகளிலோ, உணவு சம்பந்தப்பட்ட இடங்களிலோ கலந்து விட்டால் இன்னும் ஆபத்து அதிகமாக இருக்கும்.

கிருமி யுத்தம் பற்றி நம் நாட்டில் விழிப்புணர்வு குறைவு.

தொற்றுநோய் வேகமாக பரவினாலும், நம் அரசியல் வாதிகளும், தலைவர்களும் எலெக்ஷனிலும், கலெக்ஷனிலும், வழக்குகளிலும்தான் நாட்டம் காட்டுவார்களேயொழிய இது போன்ற விஷயங்களிலெல்லாம் அலட்டிக் கொள்ளமாட்டார்கள்.

ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் சாகத் துவங்கினாலும் எதிர்க்கட்சிகள் மீது பழிபோட்டு சட்டசபைகளில் பேசிக் கொண்டே தானிருப்பார்கள். காரியத்தில் இறங்கமாட்டார்கள்.

ஆந்திராக்ஸ் பற்றிய பயமும் பீதியும் பல நாடுகளை கலங்கடித்துக் கொண்டிருக்கிறது. அமெரிக்க அதிபர் இது பற்றி நேரில் தொலைக்காட்சியில் பேசுகிறார். ஜனங்களை கவனமாக இருக்க அறிவுறுத்துகிறார்.

இங்கேயோ விஞ்ஞானிகள் ஆந்திராக்ஸ் ஒன்றும் பெரிய விஷயமில்லை. சரியாகப் போய்விடும் என்று பேட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

காலை நேர டி.வியில் சித்த மருத்துவர்கள் ஆந்திராக்ஸிற்கு தங்களிடம் லேகியம் இருப்பதாக சொல்கிறார்கள்.

நம்மைப் போன்ற அலட்சிய தேசங்களில் கிருமிகள் பரப்பப்பட்டால் விளைவுகள் மிகவும் பயங்கரமாக இருக்கும்.

நாட்டின் எந்த ஒரு சிறிய இடத்திலும் வெடிக்கப்படும் வைரஸ் வெடிகுண்டுகள் சில தினங்களிலேயே நாட்டை சுடுகாடாக்கிவிடும்.

ஆப்கான் தீவிரவாதிகளிடம் இது போன்ற முப்பத்தியேழு வகைக் கிருமிகள் கைவசம் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

ஆப்கானில் இவ் வகை கிருமிகளை ஏராளமாக உற்பத்தி பண்ணி அதற்கு ஒரு ஊரையே ஒதுக்கி காவல் வைத்து வருகிறார்களாம். அமெரிக்கா யுத்தம் துவங்கும் முன் இந்த இடத்தைக் கைப்பற்றி விடத்தீர்மானித்தே நாட்களை கடத்தியதாம். பின்னர் அம் முயற்சி முடியாமல் போகவே தான் யுத்த அறிவிப்பு செய்தது என்று சி.என்.என் செய்திக்குறிப்பு தெரிவிக்கின்றது.

மூளைக்காச்சல், ஈரல் அழற்சி நோய், மஞ்சள் காமாலை, சீதபேதி, காலரா மற்றும் தோற் நோய்கள் போன்றவற்றை உண்டாக்கும் கொடிய கிருமிகளை கொண்ட சிறு குண்டுகளை ஆப்கான் மட்டுமல்ல, பல வல்லரசு நாடுகளும் செய்து பராமரித்து வருகின்றன என்பது தான் உண்மை.

அமெரிக்காவிலுள்ள மெர்ரிலெண்ட் பல்கலைக்கழகம் கிருமியியல் பரிசோதனை என்ற பெயரில் பயங்கரமான கிருமி ஆயுதங்களை உருவாக்குவதாக தி வேர்ல்ட் என்ற பத்திரிகை குற்றம் சாட்டியுள்ளது.

மேலும் இப் பத்திரிகை தனது செய்தியில் லாகூரிலுள்ள பாகிஸ்தான் மருத்துவ நிலையமான BMRL மக்களைக் கொல்லும் கொடிய கிருமிகளை உண்டாக்கும் பணிகளை மெரிலாண்ட் பல்கலைக்கழகமே தனது மேற்பார்வையில் செய்வதாக குறிப்பிட்டுள்ளது.

கியூபா தெரியுமா?

அமெரிக்கா அடிக்கடி சீண்டி விளையாடும் துளியூண்டு நாடு. இங்கே கொஞ்ச நாட்கள் முன்பு விதவிதமான தொற்று நோய்களால் ஜனங்கள் குவியல் குவியலாக மடிந்தார்கள். இதற்கும் அமெரிக்கா இங்கு சப்தமில்லாமல் வெடித்த கிருமி குண்டுகளே காரணம் என்று பலமாக நம்பப்படுகின்றது.

அபாயம் நிறைந்த இந்த கொள்ளை நோய்கள் காய சண்டிகை மாதிரி அடங்காப்பசி கொண்டவை. கும்பல் கும்பலாய் ஜனங்களை விழுங்கிவிடும் தன்மையுள்ளவை. மழுங்காமல் பரவிக்கொண்டேயிருக்கும் அற்றல் கொண்டவை.

உதாரணமாக 1901ஆம் ஆண்டில் பிளேக் நோய் இந்தியாவில் பரவத் துவங்கின போது மகாராஷ்டிராவில் மட்டும் சுமார் 1,29,000பேர் மடிந்தனர். பின்னர் 1902ஆம் ஆண்டில் சுமார் 1,84,752பேர் பலியானார்கள். இன்னும் இரண்டாண்டுகள் கழித்து சாவு எண்ணிக்கை 1,94,000 ஆக உயர்ந்ததாக புள்ளிவிவரங்கள் சொல்லுகின்றன.

கொள்ளை நோய்கள் மற்றும் கிருமிகளுடனான மனிதர்களின் யுத்தம் காலம் காலமாக நடந்து வருவதுதான். பண்டைக் காலங்களில் மலேரியா, டிங்கு, காலாரா, அம்மை போன்ற கொடிய நோய்கள் மனிதர்களை அச்சுறுத்தின. கடைசியில் அதற்கு பல தீர்வுகளைக் கண்டு வெகுவான பிரயத்தனங்களுக்குப் பின் மனிதன் அவைகளைக் கட்டுக்குள் கொண்டு வந்தான்.

பண்டைக்காலத்தில் காணப்பட்ட பல கொடிய நோய்களின் கிருமிகளைக் கூட வேருடன் அழித்தான்.

ஒழிக்கப்பட்ட அதே கிருமிகளை இன்றைக்கு மனிதனே உற்பத்தி செய்கின்றான். அவனே கட்டவிழ்த்து விடுகின்றான்.

என்ன பயங்கரம் என்று பாருங்கள்.

கிருமிகளும் வியாதிகளும் இன்றைக்கு மனிதனாலேயே திட்டமிட்டு உருவாக்கப்பட்டு பரப்பப்படுகின்றன.

யுத்தங்களில் பழைய காலங்களில் நாய்களைப் பயன்படுத்தினார்கள். பிற்பாடு குதிரைகள், இந்தியா போன்ற தேசங்களில் யுத்தங்களில் யானைகளைப் பயன்படுத்தி பிரமிக்க

வைத்தார்கள். இன்றைக்கோ யுத்தங்களில் கிருமிகளை பயன்படுத்தி நம்மை கலங்க வைக்கிறார்கள்.

நமக்கு கிருமிகளைக் கண்டு பயமில்லை. ஆனால் இது மாதிரி கிருமிகள் யுத்தங்களில் கட்டவிழ்த்து விடப்படும். எங்கும் வியாதிகள் பெருகும். இது கடைசிக்கால அடையாளம் என்று வேதம் சொல்வதில் தான் நமக்குப் புகட்டம் உண்டாகின்றது. (சீக்கிரம் ஆயத்தமாக வேண்டுமே)

இந்தப் பிரசங்கியாரிடம் பிடிக்காததே இது ஒன்று தான். டி.வி.புழக்கத்திற்கு வந்தாலும், வாக்காளர்களுக்கு அடையாள அட்டை கொடுத்தாலும், குழாயில தண்ணீர் வர்ாவிட்டாலும் எல்லாவற்றுக்கும் காரணம் இது கடைசிக்காலம், வருகை சமீபம் என்பீர்கள்.

பொறுமை, பொறுமை.

வேதத்தைக் கொஞ்சம் கவனமாக படித்துப் பாருங்கள். நான் சொல்வது சரியாக இருக்கிறதா என்று சோதித்துப் டார்த்த பின் ஏற்றுக் கொள்ளுங்கள். அல்லது மறுத்து விடுங்கள். ஒன்றும் பாதிப்பில்லை.

**சரி வேதம் என்னதான் சொல்லுகிறது?**

***மத்தேயு 24:7, லூக்கா 21:11***

***ஜனத்திற்கு விரோதமாய் ஜனமும், இராஜ்ஜியத்திற்கு விரோதமாய் இராஜ்ஜியமும் எழும்பும், பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் தோன்றும்.***

வெறுமனே பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் தோன்றும் என்று வேதம் குறிப்பிடாமல் இராஜ்ஜியங்கள் ஒன்றுக்கொன்று விரோதமாக எழும்பும் என்பதைத் தொடர்ந்து பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் தோன்றும் என்று குறிப்பிடுவதால், இவையெல்லாம் இயற்கையாகத் தோன்றும் பஞ்சங்களையும், கொள்ளை நோய்களையும் குறிப்பிடாமல் யுத்தங்களின் விளைவாகத் தோன்றும் பஞ்சங்களையும் கொள்ளை நோய்களையும் குறிப்பிடுகிறது என்று கொள்ளலாம்.

என்றால் கடைசிக் காலத்தில் தோன்றும் பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் இயற்கையானவை அல்ல, மனிதனால் பகையினிமித்தம் தோற்றுவிக்கப்படப் போகிறவை என்று பொருள் கொள்ளலாம்.

**அது எத்தனை உண்மை பாருங்கள்.**

கிறிஸ்து இவற்றை வெளிப்படுத்தின காலத்தில் எல்லாம் இப்படி ஒரு கிருமி யுத்தத்தை யாரும் கற்பனை செய்து கூடப்பார்த்திருக்க முடியாது.

இன்று தேசங்கள் தங்களுக்குள் உண்டாகும் பகைகள் நிமித்தம் வஞ்சம் தீர்க்க கொள்ளை நோய்களை பல இடங்களில் உண்டாக்கியும் பரப்பியும் வருகின்றன.

**இது கடைசிக் காலம் என்பதற்கு ஆணித்தரமான சான்று.**

பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் தோன்றுவது கடைசிக்கால அடையாளம் என்று பிரசங்கித்த போதெல்லாம் பஞ்சமும், நோய்களும் எந்தக் காலத்தில் தான் வரவில்லை? காலம் காலமாக அவை ஆங்காங்கே வந்து கொண்டுதானே இருக்கின்றன என்று கிண்டலாக பலர் கூறுவதுண்டு.

இதுவரை தோன்றிய பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் இயற்கையாகத் தோன்றியவை. ஆனால் கடைசிக்காலத்தில் தோன்றுபவையோ நாடுகளிடையே நடைபெறும் யுத்தங்களால் தோற்றுவிக்கப்படுபவை.

**எனவே இனி காலம் செல்லாது என்பதற்கு இரண்டாவது சிந்தனை தேவையில்லை.**

**வெகு சமீபம் நண்பரே.**

**உலகத்தின் ஒவ்வொரு அசைவிலும் இயேசுவின் வருகை தெரிகிறது.**

**நீங்களும் அவரை எதிர்கொண்டு போக ஆயத்தமாக இருந்தால் என்னுடன் சேர்ந்து சந்தோஷமாகச் சொல்லுங்கள்.**

**ஆமென்! கர்த்தராகிய இயேசுவே வாரும்.**

நன்றி
எச்சரிக்கை செய்திகள்
சகோ. வின்சன் செல்வகுமார்

## வினாவிடை - ௩௮
## சரியான பதில்கள்

01. சாலொமோன்ராஜா (1இராஜா. 7:8)
02. அரிமத்தியா ஊர் யோசேப்பு (லூக் 23:50)
03. கிருபையையும் சத்தியத்தையும் (நீதி 3:3)
04. இயேசுக்கிறிஸ்து (மாற் 4:38)
05. ஆபிரகாம், யாக்கோபும் அவனுடைய குமாரர்களும்
06. ஐஸ்வரியவான் (லூக் 12:16)
07. சவுல் (1சாமுவேல் 10:21)
08. ஆமான் (எஸ்தர் 9:24)
09. மணவாட்டி (உன்னதப்பாட்டு 4:7)
10. இஸ்ரவேல் (ஓசியா 14:1)



# பக்தர்களின் பயிலகம்

## பொல்லாத ஆவிகளின் செயல்

### 01. தீய ஒழுக்கம் /நெறியற்ற தன்மை

ஆவிகள் மனிதரைப் பாவம் செய்யும்படி தள்ளுகின்றது. (லூக்கா 8:2) இந்த 07ஆவிகளும் அவனை பாவத்தில் ஜீவிக்கச் செய்தது. அவன் விடுவிக்கப்பட்டபின் மாற்றப்பட்ட வாழ்க்கையோடு கர்த்தருக்கு ஊழியம் செய்தான் ஆனால் எங்களுடைய எல்லா பாவங்களுக்கும் பிசாசை குற்றப்படுத்தக்கூடாது.

(யாக்கோபு 1:14-15) பாவம் பிசாசினாலும் வரும் மாம்சத்தினாலும் வரும். மாம்சத்தினால் பாவம் உண்டானால் மனந்திரும்புதல் தேவை. ஆனால் பிசாசினால் உண்டானால் விடுதலை தேவை.

### 02. சரீரத்தில் வியாதி (லூக்கா 11:14)

பிசாசு சென்ற பின் ஊமையானவன் பேசினான். இப்படிப்பட்ட குறைபாடுகள் பிசாசினால் கொண்டு வரப்படுகின்றன. விடுதலை சொஸ்தத்தைக் கொண்டு வரும்.

### 03. மூளை வியாதி (மாற்கு 5:13-15)

பிசாசு சென்ற பின் சரியான சித்த சுயாதீனம் உள்ளவனாக இருந்தான். முன்பு இவன் கல்லறைகளில் வஸ்திரம் இன்றி இருந்தான். கல்லுகளால் தன்னையே கீறி இருந்தான். இப்படிப்பட்ட மூளை வியாதி இயற்கையானதாயும் ஆவிக்குரியதாயும் இலருக்கலாம். அது பிசாசினால் ஆனதானால் அசுத்த ஆவி போனால் சுகத்தைக் கொண்டு வரும்.

### 04. வேதனை அல்லது இம்சை (மாற்கு5:5)

மாற்கு 05ஆம் அதிகாரத்தில் உள்ள பிசாசு பிடித்திருந்தவன் இரவு முழுவதும் கூக்குரல் இட்டான். அவன் வேதனைப்பட்டான். பிசாசு

வேதனையை கொண்டு வருகின்றது. **எனவே நியாயத்தீர்ப்பின் நாளிலே பிசாசு வேதனைக்குட்படுத்தப்படும். (மத்தேயு 8:29)** இந்த வேதனை சரீரப்பிரகாரமானதாக, ஆவிக்குரியதாக, உணர்ச்சி பூர்வமானதாக இருக்கலாம்.

**(மத்தேயு 18:34-35) இயேசு: நாம் நம் சகோதரர்களுடைய தப்பிதங்களை மன்னியாவிட்டால் உபாதிக்கிறவர்களிடத்தில் விடப்படுவோம்.** அதாவது அசுத்த ஆவி எங்களை வருத்த இடம்கொடுப்பார். **பரிசுத்த ஆவி சவுலைவிட்டு நீங்கியவுடன் பொல்லாத ஆவி அவனை கலங்கப்பண்ணியது. (1சாமு. 16:14)** அது திகில் உண்டாக்குகின்றது. பயப்படப்பண்ணுகிறது. **இந்த வேதனை மனத்துக்குரியதும்** (Mental) **உணர்வோடு சம்பந்தப்பட்டதுமான வேதனையாகும். அசுத்த ஆவி நீங்கியவுடன் சவுல் ஆறுதலடைந்தான்.** (1சாமு. 16:23)

## 05. வஞ்சகம் அல்லது மோசம்

பொல்லாத அசுத்த ஆவி மக்களை ஏமாற்றி வஞ்சகத்திற்குள்ளே வைத்திருக்கும். **விக்கிரக ஆராதனை, பேய்த்தனத்திற்கு அடுத்த செயல்கள், அழிவுண்டாக்கும் செய்கை (யுத்தம்) எல்லாம்** அசுத்த ஆவியின் வஞ்சகத்தின் விளைவுகளே (1கொரி. 10:20, அப்போ. 16:16, லேவி. 19:31)

**வெளி 16:13-14 இது சண்டைகளின் பின்னணியில் பிசாசு நிற்பதை காட்டுகின்றது.** பொய்யின் ஆவியினால் இராஜாக்கள் வஞ்சிக்கப்படுகின்றார்கள். **யுத்தத்தின் மூலம் ஏதாவது ஆதாயப்படுத்திக் கொள்ளலாம் என நம்புகிறார்கள். இது பிசாசின் வஞ்சகம்.**

விடுதலையின் மூலம் மக்கள் பிசாசின் வல்லமை, ஆதிக்கம் என்பனவற்றில் இருந்து விடுதலை அடைகிறார்கள். **பிசாசை ஒருவனில் இருந்து துரத்தும் போது அச் சரீரத்தை தன் தீய காரியத்துக்காக பிசாசால் பாவிக்க முடியாது. இது சரீரத்திற்கும் ஆத்துமாவுக்கும் சொஸ்தத்தைக் கொண்டு வந்து அந் நபரை திரளான பாவத்தில் நின்று காப்பாற்றும்.**

**தொடரும்.....**

(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் இன்பரூபன்)



# குறுக்கெழுத்துப்போட்டி – 37





### இடமிருந்து வலமாக

01. ஆவியில் இப்படி இருங்களென பவுல் சொல்லுகிறார்
03. ஆக்கினிச் சூளையிலே போடப்பட்டவர்களில் ஒருவன்

### வலமிருந்து இடமாக


04. அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை. யாருக்கு?
09. இது உள்ளவர்கள் இதையே பெற்றுக்கொள்வார்கள்.
07. மோசேயினுடைய மனைவி (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழாக

02. ஆதாள், சில்லாள் என்பவர்களின் கணவன்.
03. எபிரேய நிருபத்தில் சாட்சி குறித்து பேசப்படும் போது இதனுடன் இணைத்து சொல்லப்பட்டுள்ளது.
05. எசேக்கியா ராஜா இந்தப் புறமாக திரும்பி அழுதான்.

### கீழிருந்து மேலாக

06. இதையே பவுல் ஆதாயம் என்கிறார்
08. இந்தக் காலத்தை இப்படியான காலமெனலாம்



# வித்திடும் வித்தகர்கள்

## ஹட்சன் டெய்லர்

தொடர்ச்சி...

ஒரு நாள் மாலையில் ஜோன்ஸின் மிஷன் வீட்டில் பலரும் கூடி ஆவிக்குரிய காரியங்களை அலசி ஆராய்ந்து கொண்டிருந்தனர். அங்கு ஒரு புத்தமத பக்தர் வந்திருந்தார். அவர் ஆத்தும விடுதலை பெறவிரும்பி நீண்ட பயணம் செய்து அங்கு வந்திருந்தார். ஒரு நாள் சீன உடையிலிருந்த ஓர் அந்நிய நாட்டினர், மோசேயால் வனாந்தரத்தில் சர்ப்பம் உயர்த்தப்பட்டது போல மனுஷகுமாரனும் உயர்த்தப்பட்டார். அவரை விசுவாசிக்கின்றவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனைப் பெறுவான். தேவன் தம்முடைய ஒரே குமாரனை இவ்வுலகத்துக்கு அனுப்பி இவ்வளவாய் உலகில் அன்பு கூர்ந்தார். அவரை விசுவாசிக்கின்றவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனைப் பெறுவான். தேவன் தம்முடைய ஒரே குமாரனைக் கொண்டு உலகத்தை அழிக்காமல் அவரால் உலகம் இரட்சிக்கப்படவே அவரை அனுப்பினார். என்று அவரது புனித நூலிலிருந்து வாசித்தார் என்று அந்தப் புத்தமத பக்தர் சொன்னார்.

உடனே நீயி (கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒரு சீனர்) எழும்பி நின்று நானும் உண்மையைத் தேடி எங்கெங்கோ அலைந்தேன். மன அமைதியைப் பெறமுடியவில்லை. ஆனால் ஒரு நாள் இயேசுவிடம் தான் மன அமைதியைப் பெறமுடியும் என்று கண்டுகொண்டேன். அதிலிருந்து நான் இயேசுவில் விசுவாசமுள்ளவனானேன் என்றார். அச் சாட்சி யாவரையும் அசைத்தது. நினையாத பிரகாரமாய் அங்கு சென்ற கடசனையும் அது மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. அவர் கடசனிடம் ஐயா உங்கள் இங்கிலாந்தில் எவ்வளவு காலமாக இயேசுவின் மகிமையைப் பற்றி அறிந்திருக்கிறீர்கள் என்று கேட்டார். பல நூற்றாண்டுகளாக என்று பதிலளித்தார். ஐயோ... என் தந்தை இருபது வருட காலத்திற்கு மேல் உண்மையைத் தேடித்தேடி காணாமலேயே மரித்துவிட்டார். இதை முன்னரே வந்து நீங்கள் சொல்லியிருக்கக்கூடாதா? என்றார்.





தொடரும்...

# பூவரி

# முத்துக்கள்

அறிவைக்கடந்த
தீர்வு
அன்பு

மனதைக் கிழிப்பது
வார்த்தையின்
வடிவம்

மனச் சிறைகளில்
வாடுவது
கவலை

மறைவானவை
வெளியாவது
நியாயத்தீர்ப்பில்

இரவிலும் விழிகள்
சொரிவது
ஜெபத்தில் கண்ணீர்

எழுப்புதல் எரிய
தேவையானது
இதயமே

எல்லா நீதியிலும்
பெரிய நீதி
பரிசுத்தமே

பொய்களின் நடுவே
அல்லாடுகிறது
சத்தியம்

சிரித்துக் கொல்வது
கறை நிறை
பாவம்

வரையறைகள்
தாண்டியது
கிருபை

# தேவனுடனான உறவுக்கான அனலின் அழைப்பு!

## தேவ சமூகத்தில் தரித்திருங்கள்.

இஸ்ரவேலர்கள் எகிப்து தேசத்திலே பல வருஷங்களாக அடிமைகளாக இருக்கிறார்கள். அந்தக் காலப்பகுதியிலே தான் இந்த யோசுவா என்கிற தேவ மனுஷன் பிறக்கின்றான். அவன் தேவனுடைய எல்லா வல்லமையான கிரியைகளையும் காண்கின்றான். எவ்விதமாக அந்த எகிப்தியரின் கட்டுக்களிலிருந்து தேவன் இஸ்ரவேலரை விடுவித்தார் என்பதை இந்த யோசுவா காண்கின்றான். மோசே என்கிறதான தேவ மனுஷனுக்கு யோசுவா ஒரு வேலையாளாக இருக்கின்றான். மிகவும் வல்லமையான தேவ மனுஷனுக்கு ஊழியம் செய்கிறதான பெரிதான சலாக்கியத்தை அவன் பெற்றிருந்தான்.

மோசேக்கு அவன் ஊழியனாக கொடுக்கப்பட்ட அந்த நிலையிலேயிருந்து ஜீவனுள்ள தேவனைக் குறித்து அனேக பெரிதான காரியங்களை கற்றுக்கொள்ளுகின்றான். அவன் கற்றுக்கொண்ட அந்தக் காரியங்களுக்கூடாக தேவன் மீது ஒரு பெரிதான அன்பினை வளர்த்துக் கொள்கின்றான். இவன் தேவனுடைய பிரசன்னத்தை மிகவும் மகிழ்ந்து அனுபவித்த ஒரு மனுஷன் இந்த யோசுவாவுடைய பக்கத்தை நாங்கள் பார்க்கின்ற வேளையிலே அவனைக்குறித்து கூறப்பட்டுள்ள காரியங்கள் மோசேயும் யோசுவாவும் ஆசரிப்பு கூடாரத்தில் தரித்திருந்தார்கள். மோசே ஆசரிப்புக் கூடாரத்தைவிட்டு வெளியில் சென்றுவிட்டான். ஆனாலும் யோசுவாவோ ஆசரிப்பு கூடாரத்தைவிட்டு, தேவனுடைய பிரசன்னத்தைவிட்டு விலகாதவனாக தொடர்ச்சியாகத் தரித்திருக்கின்றான். ஏனென்று சொன்னால் தேவனுடைய பிரசன்னத்திலிருந்து விலகிச் செல்வதை அவன் விரும்பவில்லை. தேவனுடைய ஆசரிப்புக் கூடாரத்திலே தன்னுடைய நேரத்தைச் செலவழிக்கின்றான்.

வாலிபர்களே, வாலிப ஸ்திரிகளே தேவனுடைய பிரசன்னத்திலே தொடர்ந்தும் நிலைத்திருக்கும்படியாய் உங்களை

அழைக்கின்றேன். பிரியமான தாய்மார்களே, தகப்பன்மார்களே யோசுவாவைப் போல தேவனுடைய பிரசன்னத்திலே தொடர்ந்தும் தரித்து இருக்கும்படியாய் உங்களை அழைக்கின்றேன். தேவனுடைய பிரசன்னத்திலிருந்து ஓடிச்செல்லாதீர்கள். தேவனுடைய பிரசன்னத்தைக் குறித்த வாஞ்சையை உங்களுடையவாழ்க்கையிலே வளர்த்துக் கொள்ளுங்கள். தேவனுடைய பிரசன்னத்திலே தொடர்ச்சியாகத் தரித்திருக்கப்பழகிக் கொள்ளுங்கள்.

**இனிமையான இயேசு கிறிஸ்துவே நீர் எவ்வளவு அற்புதமானவர். நீர் விடிவெள்ளி நட்சத்திரத்தைவிட பிரகாசமானவர். அவர் எங்களுக்கு தெளிதேனைப் போன்ற மதுரமானவர்** என்று ஒரு பாடகர் பாடியுள்ளார்.

இயேசு கிறிஸ்து எவ்வளவு இனிமையானவராய் இருக்கின்றார். நீங்கள் அவருடைய பிரசன்னத்திலே தொடர்ந்து தரித்திருப்பதற்கு விரும்புகிறீர்களா?. அதை யோசுவாவுடைய வாழ்க்கையிலிருந்து கற்றுக் கொள்ளுங்கள். வேதாகமம் சொல்லுகிறது **அவருடைய பிரசன்னத்திலே நித்திய மகிழ்ச்சி உண்டு. அவருடைய வலது பாரிசத்திலே நித்திய பேரானந்தம் உண்டு.**

இந்த மோசே என்கிறதான தேவ மனுஷன் அனேக பிரச்சினைகளை அங்கு எதிர்கொள்ளுகின்றான். அந்த எல்லாப் பிரச்சினைகளையும் யோசுவாவும் எதிர்கொள்ளுகின்றான். மோசே பிரச்சினைகளை எதிர்கொண்ட பொழுதும் யோசுவா ஒரு பொழுதும் மோசேயைவிட்டு ஓடிச்செல்லவில்லை. அவன் மோசே எதிர்கொண்ட எல்லாப்பிரச்சினைகளையும் தானும் எதிர்கொண்டான். அவன் மோசேயோடு கூட தொடர்ந்து நிலைத்து நின்றான்.

குளிர்காலத்திலே குளிர்நாட்டில் வாழுகின்ற பறவைகள் அந்த இடத்திலே இருக்கமுடியாமல் வெப்பமான தேசத்தை நோக்கிச் சென்றுவிடும். ஆனால் கழுகுகள் என்ன செய்யுமென்றால் குளிரான இடத்திலேயே இருந்து பனிப்பாறையின்மீது தமது முட்டைகளைஇட்டு அடைகாக்கும். வசந்த காலம் வருகின்ற வேளையிலே அந்த இடத்திலே அனேக கழுகுக்குஞ்சுகளைக் காணமுடியும். **தேவாலயத்தில் ஒரு குளிர்காலம் போன்ற சூழ்நிலை வருகின்ற வேளையில் கழுகுக் கிறிஸ்தவர்கள் என்ன செய்வார்கள். தங்களுடைய ஜெப அறைக்குள்ளே போய் தேவனுக்கு முன்பாக நின்று தேவனிடம்**

பரிந்து பேசுவார்கள். **அவர்கள் தொடர்ச்சியாக தேவனுடைய சமுகத்திலே கண்ணீர் விட்டு அழுவார்கள். அப்பொழுது மிக விரைவாக திருச்சபையிலே எழுப்புதல் உண்டாகும்.** உண்மையான கிறிஸ்தவர்கள் தேவாலயத்தில் பிரச்சினை வருகின்ற போது திருச்சபையைவிட்டு ஓடிச்செல்ல மாட்டார்கள்.

யோசுவா மோசேயோடு கூட பத்துக்கட்டளைகளைப் பெற்றுக் கொள்ளும்படி மலைக்குச் செல்கிறான். அவர்கள் சீனாய் மலையில் இருந்து இறங்கி வருகின்ற வேளையில், மோசேயினால் ஜனங்களுக்கு தலைவனாக நியமிக்கப்பட்ட ஆரோன் ஜனங்களை பிழையான காரியத்தைச் செய்யப்பண்ணினான். அவர்கள் ஒரு தங்கக் கன்றுக் குட்டியைச் செய்தார்கள். அதன் பிற்பாடு இஸ்ரவேலர்கள் எல்லோருமாகச் சேர்ந்து பெரிதான ஒரு பண்டிகையைக் கொண்டாடினார்கள்.

மலையிலிருந்து மோசேயும் யோசுவாவும் இறங்கி வருகின்ற வேளையிலே யோசுவா ஆரோனுடைய கூட்டத்தாரோடு சேர்ந்து கொள்ளவில்லை. யோசுவா தொடர்ச்சியாக மோசேயினுடைய பக்கத்திலேயே தனிமனிதனாக நின்றான். **யோசுவாவைப் போன்று வாழத்துணிவு கொள்ளும்படிக்கு நான் உங்களை அழைக்கின்றேன்.** தேவனுடைய ஜனங்களோடு நில்லுங்கள். தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக நில்லுங்கள்.

**எண்ணாகமம் 12:1 மிரியாமும் ஆரோனும் அவன் விவாகம் பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரியினிமித்தம் அவனுக்கு விரோதமாய் பேசி.** அவர்கள் மோசேக்கு எதிராகப் பேசுகிறார்கள். அதே வண்ணமாக எண்ணாகமம் 16:1-3 கோராகு, தாத்தான், அபிராம் என்பவர்கள் மோசேக்கு எதிராகப் பேசுகிறார்கள். யோசுவாவும் மோசேயோடு கூட நின்றாலும் அவனும் இவர்கள் சொல்லுகிற எல்லாவிதமான முறைப்பாடுகளையும் தெரிந்தவனாயும், அறிந்தவனாயும் இருந்தான். **ஆனாலும் யோசுவா தொடர்ச்சியாக தன்னுடைய உண்மைத்துவத்தை காத்துக் கொண்டான்.** அவன் தொடர்ச்சியாக மோசேயோடு கூட உறுதியாக நின்றான்.

இங்கே நாங்கள் பார்க்கின்ற போது யோசுவா பின்பற்றும் படியாய் நல்ல ஒரு உதாரணத்துவம் அங்கு காணப்படவில்லை. அவனுடைய ஒத்த வயதுடையவர்கள் அங்கு தேவனைப் பின்பற்றவில்லை. ஆனால் வேதாகமம் சொல்லுகிறது யோசுவா முற்றிலும் கர்த்தரைப் பின்பற்றினான்.

தேவனுடைய காரியங்களுக்கு எதிராக முரட்டாட்டம் பண்ணுகிற சந்ததியோடு இணைந்து கொள்வதற்கு அல்ல. தேவனுடைய மனுஷனோடு தொடர்ச்சியாய் நிற்பதற்காக, தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் நிற்பதற்காக யோசுவா தொடர்ச்சியாக தன்னுடைய விசுவாசத்தைக் காத்துக் கொண்டான். யோசுவா ஒரு பொழுதும் முறுமுறுக்கிறவர்களோடோ, பிரிந்து போகிறவர்களோடோ தன்னை இணைத் துக் கொள்ளவில்லை. அவன் மற்றவர்களால் தான் பிழையாக வழிநடத்தப் பட்டேன் என்று சொல்லவில்லை.

யோசுவாவுடைய வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள் ளுங்கள். **யாராவது தேவனைக் குறித்தோ, தேவனுடைய திருச் சபையைக் குறித்தோ தீமையாகப் பேசினால் நீங்கள் ஒரு யோசுவாவாக அவர்களுக்கு செவிசாய்க்காதீர்கள்.** அந்தத் தீமையான பேச்சுக்களை நீங்கள் கேட்டு அந்த வலைக்குள்ளே விழுந்து இரையாகிவிடாதீர்கள். நீங்கள் தீமையான பேச்சுக்களுக்கு செவிசாய்க்கின்ற வேளையிலே உங்களது விலையேறப்பெற்ற ஆத்துமாக்களை நீங்கள் கறைபடுத்திக் கொள்வீர்கள். இப்பொழுது சில வேளைகளில் நீங்கள் இதைப் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம். நீங்கள் அந்த நித்திய வாழ்க்கையை பெறுகின்ற படிக்குள்ளாய் வருகின்ற வேளையிலே நீங்கள் தேவனுடைய மகா உன்னதமான பரலோகத்திலிருந்து நித்தியமாகவே பிரிந்துபோய் விடுவீர்கள். தீமையான பேச்சுக்களுக்கு செவிசாய்க்கிறதான காரியமானது எங்கள் ஆத்துமாவைக் கெடுப்பது மட்டுமன்றி தேவன் மீது கொண்டுள்ள அன்பையும் கூட அது குளிர்ந்து போகப்பண்ணிவிடும்.

தேவனுடன் நீங்கள் கொண்டுள்ள தொடர்பை இந்தத் தீமையான பேச்சுக்களுக்கு செவிசாய்த்தல் என்கிறதான காரியம் துண்டித்துவிடும். மிகவும் அழகான ஒரு உதாரணமாக யோசுவா இங்கு காணப்படுகின்றான். அவன் தொடர்ச்சியாக தேவனுக்கு உண்மையுள்ளவனாக இருந்தான். அவன் தேவனுக்கு மாத்திரமல்ல தேவன் தனக்காக, தன்மீது அனுமதித்த அந்த மோசேக்கும் அவன் உண்மையுள்ளவனாக இருந்தான்.

மோசே இந்த உலகத்தைவிட்டு கடந்து போகிற வேளை வந்த போது மோசே அங்கு எதைச் செய்தான்? கர்த்தர் சொன்னபடி தன்னுடைய தலைமைத்துவத்தை எடுத்துக் கொள் என்று சொல்லி யோசுவாவுக்கு கொடுத்தான். ஏனெனில் யோசுவா உண்மையுள்ளவனாக இருந்ததை மோசே கண்டுகொண்டான மோசே, யோசுவா

பொறுப்புக்களை செய்வதிலே மிகவும் திறமை வாய்ந்தவனாகக் காணப்பட்டதை நாங்கள் காணலாம்.

யோர்தான் நதியின் ஊடாக இஸ்ரவேலரைக் கடக்கப்பண்ணினான். அவன் எரிகோவை வெற்றி கொண்டான். அவர்கள் பெரிதாக ஆராவாரம் இட்டு சத்தமிட்டார்கள். எரிகோவின் அலங்கம் இடிக்கப்பட்டது. அவன் 31ராஜாக்களை அங்கு கொலை செய்கின்றான். 12கோத்திரங்களிற்கும் கானான் தேசத்தை பிரித்துக் கொடுத்தான். அவனுடைய வாழ்க்கையின் முடிவு காலத்திலே அவன் எல்லா ஜனங்களையும் அங்கு ஒன்றிணைத்து தேவனைத் தொடர்ச்சியாக ஆராதிக்கும்படியாய் தேவனைத் தொடர்ச்சியாக சேவிக்கும்படியாய் அவர்களை உற்சாகப்படுத்தினான். **நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்.** அவன் தான் மாத்திரம் கர்த்தரைச் சேவிக்கவில்லை. இன்று நீங்கள் குடும்பமாக சேர்ந்து கர்த்தரைச் சேவிக்கிறீர்களா? அல்லது நீங்கள் மாத்திரம் கர்த்தரைச் சேவிக்கிறீர்களா? அப்படியானால் உங்களுடைய மற்றைய குடும்ப அங்கத்தவர்கள் எங்கே?

ஞாயிற்றுக்கிழமை அது கர்த்தருடைய நாள். ஜீவனுள்ள தேவனை ஆராதிக்கும்படியாய் அதை நாங்கள் வேறு பிரித்து வைத்திருக்கிறோம். தேவனை நாங்கள் முழு இருதயத்தோடு சேவிப்போம். உங்களுடைய வீட்டிலே நீங்கள் ஒருவர் மாத்திரம் மறுபடி பிறந்த கிறிஸ்தவராக இருக்கலாம். **உங்கள் வீட்டார் எல்லோரும் உங்களுக்கு முட்களைப் போல இருக்கலாம். ஆனாலும் நீங்கள் அந்த முட்களின் மத்தியிலே இயேசு கிறிஸ்துவுக்காக அழகாக மலருவீர்களா?**

தேவனை ஆராதிப்பதைக் குறித்து தன்னுடைய வீட்டாருக்குக் கற்றுக்கொடுப்பதிலே மிகவும் யோசுவா ஜாக்கிரதையாக இருந்தான். அனேக தேவ மனுஷர்கள் சொல்லுவார்கள் நான் அனேக காரியங்களை அம்மாவுடைய முழந்தாள் படியில் இருந்து கற்றுக்கொண்டேன் என்று. எனவே பிரியமான அம்மாமாரே, அப்பாமாரே நீங்கள் முழந்தாள் படியிட்டு ஜெபிப்பதை உங்களுடைய பிள்ளைகள் காணக்கூடியதாக உள்ளதா? குடும்பத்தாராகிய நீங்களும் யோசுவா சொன்னது போல சொல்ல முடியுமா? **நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்.** நீங்கள் குடும்பமாக சேர்ந்து தேவனுக்குப் பயந்தவர்களாக, உண்மையாக முழு இருதயத்தோடு தேவனைச் சேவிக்கிறவர்களாய் இருப்பீர்களா?

இரண்டு சகோதரிகள் ஒரு வீட்டிலே இருக்கிறீர்கள். உங்களுடைய தாயும், தகப்பனும் வெளியில் சென்றுவிட்டார்கள். எனவே நீங்கள் மாத்திரம் அங்கே வீட்டிலே இருக்கின்றீர்கள். அவ்விதமான சந்தர்ப்பத்திலே நீங்கள் இருவருமாக இணைந்து குடும்ப ஜெப வேளையிலே தேவனைச் சேவிப்பீர்களா? மற்றவர்கள் உங்களைப் பார்த்து சொல்ல முடியுமா? இவர்கள் முற்றிலுமாய் தேவனைப் பின்பற்றுகிறார்கள் என்று. யோசுவாவைப்

பின்பற்றி நீங்கள் தேவனை ஆராதியுங்கள். உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்ட நிச்சயத்தை நீங்கள் காண்கின்ற வேளையிலே தேவ சமாதானம் உங்கள் இருதயத்தை நிரப்பும். அதன் பிற்பாடு இயேசு கிறிஸ்துவின் மீதான அன்பு உங்களுடைய வாழ்க்கையிலே பெருகும்.

கிறிஸ்து மீதான அன்பு உங்களுடைய வாழ்க்கையிலே பெருகும் போது நீங்கள் தொடர்ந்தும் அவருடைய பிரசன்னத்திலே நீடித்து நிலைத்திருப்பீர்கள். தேவாலயத்திற்கு நேரத்தோடு வருவீர்கள். தேவனுடைய வீடு உங்களுடைய வாழ்க்கையிலே ஒரு மகிழ்ச்சியின் இடமாக மாறும். நீங்கள் முற்றிலுமாய் தேவனை சேவித்து அவருடைய பிரசன்னத்திலே நீடித்து நிலைத்து நிற்பீர்கள்.



**போதகர் J.K. பிலிப்**
**தலைமைப் போதகர்**
**சீயோன் தேவாலயம்**
**யாழ்ப்பாணம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி – 36
## சரியான பதில்கள்

***இடமிருந்து வலமாக***

01. அத்திமரம்
07. சேவல்
11. சோ
12. யோவேல்

***மேலிருந்து கீழாக***


01. அதோனிபேசேக் திபா 1:7
02. தீனம்
03. சாறிபாத்
04. ஏசாயா
05. கர்த்தர்
08. ஆபேல்

***வலமிருந்து இடமாக***

04. ஏசாயா
06. யாத்திராகமம்
08. ஆமான்

***கீழிருந்து மேலாக***

09. நாபால்
10. ரூத்



## சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

### சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 130.00 Per Year |
| இந்தியா | S.L Rs 250.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 400.00 Per Year |
| மற்றைய எல்லா நாடுகளும் | S.L Rs 350.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

**சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்**

### சந்தா கூப்பன்

பெயர் :-..............................................................

விலாசம் :-..............................................................

..............................................................

..............................................................

..............................................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.




To:...........................................

...........................................

...........................................

Zion Church Office,
No. 347, Navalar Road,
Jaffna, Sirlanka.

TO:
IISS. MATHARA GNANACHCHANDRAN,
LVAI EAST,
VAI,
DATHTHADY.

அல்வாய்
மடத்தடி